இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 117 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 21 – வெள்ளிக்கிழமை 06 டிசம்பர் 2024 – மதுரை 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 117: Thiruvalluvar Year - 2055 - Karthigai 21 - Firday 06 December 2024 - Madurai 16 Pages ₹ 5.00

## காலநிலை மீள்திறன் - நிலைத்த வளர்ச்சியில் உலக அரங்கில்

# தமிழ்நாட்டை முன்னோடியாக மாற்றிக் காட்டுவோம்!

## காலநிலை மாற்றத்திற்கான நிர்வாகக் குழுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, டிச. 6–**

**“காலநிலை மீள்திறன் - நிலைத்த வளர்ச்சியில் உலக அரங்கில் தமிழ்நாட்டை முன்னோடியாக மாற்றிக் காட்டுவோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், காலநிலை மாற்றத்திற்கான நிர்வாகக் குழுவின் 2வது கூட்டத்தில் உரையாற்றும் போது உறுதியுடன் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.12.2024) சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான நிர்வாக குழுவின் இரண்டாவது கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:

காலநிலை மாற்றம்தான் மனித சமுதாயம் எதிர்கொள்ள இருக்கக்கூடிய மாபெரும் சவால்! இதை நமது அரசு தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறது. சொல்வது மட்டுமல்ல; அதை எதிர்கொள்வதற்கான செயல் திட்டங்களையும் தீட்டி வருகிறோம். காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற வகையில், நம்மை தக்கவைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

- தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம் –
- தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் –
- பசுமைத் தமிழ்நாடு இயக்கம் –
- தமிழ்நாடு ஈரநில இயக்கம் –
- தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்

ஆகிய இயக்கங்கள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

### காலநிலை மாற்றத்திற்கு ஏற்றவாறு திட்டமிடல்!

இதுபோன்ற இயக்கங்கள், திட்டமிடுதல்கள் வேறு எந்த மாநிலத்திலும் எடுக்கப்படவில்லை என்பது உங்களுக்கு நன்றாக தெரியும். இந்த இயக்கங்களுக்குக் கொள்கை வழிகாட்டவும், ஆலோசனைகள் வழங்கவும், காலநிலை மாற்றத்திற்கான நிர்வாகக் குழுவை தமிழ்நாடு அரசு உருவாக்கி, பொருளியல் அறிஞர் மாண்டேக் சிங் அலுவாலியா, சுற்றுச்சூழல் ஆர்வலர் எரிக் சொல்ஹெய்ம், உலக சுகாதார நிறுவனத்தின் முன்னாள் தலைமை அறிவியலாளர் மருத்துவர் சவுமியா சுவாமிநாதன், நீடித்த கடலோர மேலாண்மைக்கான தேசிய மையத்தின் நிறுவனர் இயக்குநர் பேராசிரியர் ரமேஷ் ராமச்சந்திரன், அண்ணா பல்கலைக் கழகத்தின் காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மைய முன்னாள் இயக்குநர் முனைவர் ராமச்சந்திரன், பூவுலகின் நண்பர்கள் ஒருங்கிணைப்பாளர் சுந்தர்ராஜன், ராம்கோ சமூக சேவைகள் அமைப்பின் தலைவர் திருமிகு நிர்மலா ராஜா ஆகியோரை உறுப்பினர்களாக நியமித்திருக்கிறோம்.

காலநிலை மாற்றம் குறித்த தமிழ்நாடு அரசின் மாநில செயல் திட்டத்துக்கு ஒப்புதல் அளிப்பதுதான் இந்தக் குழுவின் கடமை.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (5.12.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான நிர்வாக குழுவின் இரண்டாவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொருளியல் அறிஞர் மாண்டேக் சிங் அலுவாலியா, சுற்றுச்சூழல் ஆர்வலர் எரிக் சோல்ஹெய்ம், உலக சுகாதார நிறுவனத்தின் முன்னாள் தலைமை அறிவியலாளர் மருத்துவர் சவுமியா சுவாமிநாதன், நீடித்த கடலோர மேலாண்மைக்கான தேசிய மையத்தின் நிறுவனர் இயக்குநர் பேராசிரியர் ரமேஷ் ராமச்சந்திரன், அண்ணா பல்கலைக்கழகத்தின் காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மைய முன்னாள் இயக்குநர் முனைவர் ராமச்சந்திரன், பூவுலகின் நண்பர்கள் ஒருங்கிணைப்பாளர் சுந்தர்ராஜன், ராம்கோ சமூக சேவைகள் அமைப்பின் தலைவர் திருமிகு நிர்மலா ராஜா, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாநில மற்றும் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கங்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்கவும், அரசின் அனைத்துப் பணிகளும் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் குறிக்கோள்களுடன் இணைந்து அமைவதை உறுதிசெய்வதும் இந்தக் குழுவின் கடமை.

### காலநிலை மாற்றத்திற்காக எனது தலைமையில் அமைக்கப்பட்ட முதல் குழு!

என்னுடைய தலைமையிலான இந்தக் குழு தான், இந்தியாவிலேயே காலநிலை மாற்றத்திற்காக அமைக்கப்பட்ட முதல் நிர்வாகக் குழு. அந்த வகையில், தமிழ்நாடு, இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக அமைந்திருக்கிறது.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில், மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னுதாரணமாக தமிழ்நாடு இருக்கிறது.

2070ஆம் ஆண்டுக்குள், ‘நெட் ஜீரோ எமிஷன்’ எட்டுவதற்கான வழிகாட்டியாக இந்த காலநிலை மாற்ற இயக்கம் திகழ்கிறது. இதற்கு உறுதுணையாக உருவாக்கப்பட்டுள்ள ‘பசுமைத் தமிழ்நாடு இயக்கம்’ மூலம், ‘Biodiversity’யை முன்னிறுத்தவும் ‘Carbon Sink’ஐ அதிகரிக்கவும், ஏற்கெனவே 8.3 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டிருக்கிறது.

### நீண்ட கடற்கரை நம் மாநிலத்திற்கு இயற்கை அரணாக விளங்குகிறது!

நம் மாநிலத்திற்கு இயற்கை அரணாக விளங்கக்கூடியது, மிக நீண்ட நெடிய கடற்கரை! அதை வலுப்படுத்துகின்ற வகையில், ‘தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்’ உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த இயக்கத்தின் மூலமாக, ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவுக்கு ‘அலையாத்திக் காடுகள்’, ‘கடல் புற்கள்’ மற்றும் பிற Critical Habitats (பல முக்கியத்துவம் வாய்ந்த கடல் வாழிடங்கள்) உருவாக்குதல் மற்றும் மீட்டெடுத்தல் போன்ற முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தச் சூழல் அமைப்புகள், Carbon Zincகளாகவும், கடல் அரிப்பிலிருந்து கடற்கரைகளைப் பாதுகாப்பதாகவும் அமையும்.

### புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியில் தமிழ்நாடு 3வது இடம்!

தமிழ்நாடு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியில், இந்தியாவிலேயே மூன்றாவது மாநிலமாக இருக்கிறது. காற்றாலை மூலம், ஆண்டுக்கு 11 ஆயிரத்து 900 மில்லியன் யூனிட் மின்சாரமும் கிடைக்கிறது.

2030 ஆம் ஆண்டுக்குள், தமிழ்நாட்டினுடைய 50 விழுக்காடு ஆற்றல், ‘புதுப்பிக்கத்தக்க ஆற்றல்’ மூலம் பெறுவதை குறிக்கோளாக கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் காலநிலைத் திட்டத்தில் முக்கியத் தூணாக விளங்குவது, ‘ஊரக நீர்ப் பாதுகாப்பு’.

2024-2025ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் 500 கோடி ரூபாய் முதலீட்டில், 5000 சிறிய நீர்ப்பாசன குளங்கள் அமைக்கப்பட இருக்கிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டில் 2 லட்சத்து 39 ஆயிரத்து 701 இயற்கை வள மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.3 இலட்சம் நீர் சேகரிப்பு அமைப்புகள் உருவாக்கம்!

கடந்த 2021ம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட பரப்புரைகள் மூலம், 100 நாள் நீர் சேகரிப்பு இயக்கமானது, நீர்ப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காகவும், வேளாண் உற்பத்தியை அதிகரிக்கவும், 1.3 இலட்சம் நீர் சேகரிப்பு அமைப்புகள் உருவாக்கியிருக்கிறது.

> **“மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு இங்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு அரசை பொறுத்த வரைக்கும், பொருளாதார மேம்பாட்டையும், சுற்றுச்சூழல் பொறுப்புணர்வையும் இரு கண்களாக நினைத்து தொடர்ந்து செயலாற்றி வருகிறோம். அதற்காகதான், நீர்நிலைகள் மறுசீரமைப்பு, ClimateResilient Cities உருவாக்குவது, Biodiversityயைப் பாதுகாக்குகிறது என்று முன்னெடுப்புகளை எடுக்கிறோம்.”**

12 மாநகராட்சிகள் மற்றும் 9 நகராட்சிகளில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் அமைப்புகள், காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்வதற்கு ஆயத்தமாகும் வண்ணம் நவீனப்படுத்தப்பட்டிருக்கிறது.

மேலும், 2,477 நகர்ப்புற நீர் நிலைகளை மறுசீரமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள், நீரின் அளவையும் தரத்தையும் அதிகரித்து நகர்ப்புறங்களின் நிலைத்தன்மையை வலுப்படுத்தியிருக்கிறது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## பெஞ்சல் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு

# கழகத்தின் சார்பில் நிவாரணப் பொருட்கள்!

## அண்ணா அறிவாலயத்திலிருந்து - தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அனுப்பி வைத்தார்!

**சென்னை, டிச.6–**

**ஃபெஞ்சல் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு கழகத்தின் சார்பில் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்திடும் வகையில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் வாகனங்களை கொடியசைத்து அனுப்பி வைத்தார்.**

ஃபெஞ்சல் புயலின் காரணமாக வரலாறு காணாத மழை பெய்த மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் தமிழ்நாடு அரசு மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளை மேற்கொண்டுவருவதால் இயல்பு நிலை திரும்பி வருகிறது.

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், தி.மு.க. சார்பில் நிவாரணப் பொருட்களை பாதிக்கப்பட்ட மாவட்டத்திலுள்ள மக்களுக்கு அனுப்பி வைக்க அறிவுறுத்தியிருந்தார்.

அந்த அறிவுறுத்தலுக்கிணங்க, அரியலூர் மாவட்டத்தின் சார்பில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களால் 25,000 உணவுப்பொட்டலங்கள் தயார்செய்யப்பட்டு, விக்கிரவாண்டியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தின் சார்பில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களால், 1 இலட்சம் கிலோ அரிசியை அனுப்பி பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.12.2024) சென்னை அண்ணா அறிவாலயத்திலிருந்து, சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 1.50 இலட்சம் கிலோ அரிசியை பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அனுப்பி வைப்பதற்காக அவ்வாகனங்களை கொடியசைத்து அனுப்பி வைத்தார்.




ஃபெஞ்சல் புயலின் காரணமாக வரலாறு காணாத மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அரசின் நிவாரணப்பணிகள் முடுக்கிவிடப்பட்டு இயல்பு நிலை திரும்பி வருகிறது. முதலமைச்சர் அவர்கள் தி.மு.க. சார்பில் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைக்க அறிவுறுத்தியிருந்த நிலையில் அரியலூர் மாவட்டத்தின் சார்பில் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் 25,000 உணவுப்பொட்டலங்களை விக்கிரவாண்டி தொகுதியில் விநியோகித்துள்ளார். காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தின் சார்பில் தா.மோ.அன்பரசன் அவர்கள் 1 லட்சம் கிலோ அரிசியை அனுப்பி வைத்துள்ளார். சென்னை தெற்கு மாவட்டத்தின் சார்பில் மாண்புமிகு மா.சுப்பிரமணியன் அவர்கள் ஏற்பாடு செய்துள்ள 1.5 லட்சம் கிலோ அரிசி ஏற்றிய வாகனங்களை முதலமைச்சர் அவர்கள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் இருந்து பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்தார்.